## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016- மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்தை மாற்றியமைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-3.2) த் துறை**

**அரசாணை (நிலை) எண்.** 10

**நாள்:** 25.05.2022
ஸ்ரீ பிலவ வைகாசி -11,
திருவள்ளுவர் ஆண்டு,2053
**படிக்கப்பட்டது:**

1. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016
2. அரசாணை (நிலை) எண்.26, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந.3.2)த் துறை, நாள் 28.07.2017
3. அரசாணை (நிலை) எண்.49, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந.3.2)த் துறை, நாள் 26.12.2017.
4. அரசாணை (நிலை) எண்.11, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந.3.2)த் துறை, நாள் 24.04.2018.
5. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் / மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க.எண்.6814/ மா.தி.ந.2.2/2017, நாள் 12.11.2021 மற்றும் 04.05.2022.
6. சட்டமன்ற பேரவைச் செயலக அ.சா.எண்.2250/சமுவ-2/2022-1, நாள் 25.03.2022.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-இன் பிரிவு 66-இல், ஒவ்வொரு மாநிலத்திலும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மாண்புமிகு அமைச்சர் (ச.ந.(ம)ச.தி) அவர்கள் தலைமையில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியம் ஏற்படுத்தப்பட்டது.

3. அதனை தொடர்ந்து மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்தின் உறுப்பினர் செயலராக மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் நியமிக்கப்பட்டார்.

4. அதன் பின்னர், மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்தின் அலுவல் சார் உறுப்பினர்களாக மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

5. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் / மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்தை மாற்றியமைக்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட சட்டமன்ற பேரவைச் செயலகக் குறிப்பில், மூன்று சட்டமன்ற உறுப்பினர்களை மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்தில் உறுப்பினர்களாக பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

7. மேற்காணும் சூழ்நிலையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் / மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலித்த அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இணைப்பில் உள்ள உறுப்பினர்களை கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்தை மாற்றியமைத்து ஆணையிடுகிறது.

8. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் 2016-இன், சட்டப் பிரிவு 71-இன்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியமானது கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ளும்:-

1. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியமானது மாநில அளவில் மாற்றுத்திறனாளிகள் நலன் குறித்து கலந்தாய்வு மற்றும் ஆலோசனை வழங்கும் அமைப்பாகவும், மாற்றுத்திறனாளிகள் நலன் குறித்து அவர்களது உரிமைகளை முழுவதும் அனுபவிக்கும் விதத்திலும் கொள்கைகளை வகுப்பதில் உறுதுணையாகவும் செயல்படும்.

2. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியமானது கீழ்கண்ட பணிகளையும் மேற்கொள்ளும்:-

    (a) மாநில அளவில் மாற்றுத்திறனாளிகள் குறித்த கொள்கைகள், செயல்முறைத் திட்டங்கள், சட்ட முன்வரைவுகள் மற்றும் திட்டங்களை வகுப்பதில் ஆலோசனைகளை வழங்குதல்.

(b) மாற்றுத்திறனாளிகள் குறித்த சிக்கல்களைக் களையும் வண்ணம் மாநிலக் கொள்கைகளை மேம்படுத்துதல்.

(c) மாற்றுத்திறனாளிகள் நலன் குறித்து செயல்படும் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு துறைகள் அரசு, அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவைகளின் நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

(d) மாற்றுத்திறனாளிகளின் நலன் தொடர்பாக செயல்படுத்தப்படும் மாநில அரசின் திட்டங்களின் மீதான கருத்துகளை மாற்றுத் திறனாளிகள் நலன்சார்ந்த அமைப்புகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து பெற்று வழங்குதல்.

(e) மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற சூழலை உருவாக்குதல், ஏதுவான தங்குமிட வசதிகளை ஏற்படுத்துதல், மாற்றுத் திறனாளிகளை இழிவுப்படுத்துவதை தடை செய்தல், அவர்களுக்கான பாகுபாடுகளைக் களைதல், சேவைகள் அளித்தல், உகந்த சூழல்களை உருவாக்குதல் மற்றும் சமூகத்தில் அவர்களது பங்களிப்பை உறுதிசெய்தல் குறித்த பரிந்துரைகளை அளித்தல்.

(f) மாற்றுத்திறனாளிகளுக்கு முழு பங்கேற்பினை உறுதி செய்யும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட சட்டங்கள், கொள்கைகள் மற்றும் திட்டடங்களின் தாக்கத்தினை கண்காணித்து மதிப்பீடு செய்தல்.

(g) மாநில அரசால் அவ்வப்போது ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ளுதல்.

9. மேலும், இவ்வாலோசனை வாரியத்தில் நியமனம் செய்யப்படும் அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-இன் சட்டப்பிரிவுகள் 67 முதல் 71 வரை கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுவர்.

10. மேலும், இவ்வரசாணையின் இணைப்பில் உள்ள அறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழில் பொது தகவலுக்காக வெளியிடுமாறு, அரசு மைய அச்சக பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர்.லால்வேனா
அரசு செயலாளர்

பெறுநர்

பணி மேலாளர், மைய அச்சகம், நாணய சாலை கட்டடம், சென்னை -79.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை- 09.

அனைத்து தலைமைச் செயலகத் துறைகள்,
தலைமைச் செயலகம், சென்னை -09.
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை -05.
அனைத்து உறுப்பினர்கள் (மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை- 18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை- 09.
அனைத்து பிரிவுகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை- 09.
உதிரி / இருப்புக்கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
25/05/2022 25/05/2022

## இணைப்பு

## அறிவிக்கை

| | | | |
|---|---|---|---|
| (அ) | மாண்புமிகு முதலமைச்சர் | | தலைவர் |
| (ஆ) | மாநில அரசின் செயலாளர்கள் | | |
| | 1. அரசுச் செயலாளர்,<br>மாற்றுத்திறனாளிகள் நலத்துறை | | அலுவல் சார் உறுப்பினர் |
| | 2. அரசு முதன்மைச் செயலாளர்,<br>பள்ளிக் கல்வித் துறை | | " |
| | 3. அரசு முதன்மைச் செயலாளர்,<br>உயர் கல்வித் துறை | | " |
| | 4. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | | " |
| | 5. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>நிதித்துறை | | " |
| | 6. அரசுச் செயலாளர்,<br>மனித வள மேலாண்மைத் துறை | | " |
| | 7. அரசு முதன்மைச் செயலாளர்,<br>மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை | | " |
| | 8. அரசு முதன்மைச் செயலாளர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | | " |
| | 9. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>தொழில் துறை | | " |
| | 10. அரசுச் செயலாளர்,<br>தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை | | " |
| | 11. அரசு முதன்மைச் செயலாளர்,<br>வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | | " |
| | 12. அரசு முதன்மைச் செயலாளர்,<br>தகவல் தொழில் நுட்பவியல் துறை | | " |
| | 13. அரசு முதன்மைச் செயலாளர்,<br>இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | | " |
| | 14. அரசு முதன்மைச் செயலாளர்,<br>போக்குவரத்து துறை | | " |
| (இ) | சட்டமன்ற உறுப்பினர்கள் | | |
| | 1. டாக்டர் நா.எழிலன்,<br>ஆயிரம்விளக்கு தொகுதி<br>சட்டமன்ற உறுப்பினர் | எண்.14, சிவசங்கரன் அபார்ட்மெண்டஸ், சிவசங்கரன் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600086. | அலுவல் சார் உறுப்பினர் |

| | | | |
|---|---|---|---|
| | | <u>சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு முகவரி</u><br>"B" பிளாக், 2-வது மாடி,<br>Qts. எண். "C"<br>சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு, ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,<br>சென்னை- 600 002. | |
| | 2. திரு.A.G. வெங்கடாசலம்,<br>அந்தியூர் தொகுதி<br>சட்டமன்ற உறுப்பினர் | எண்.25, சிங்காரத் தெரு,<br>அந்தியூர், ஈரோடு -638 501<br><u>சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு முகவரி</u><br>"D" பிளாக், 8-வது மாடி,<br>Qts. எண். "C"<br>சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு, ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,சென்னை - 600 002 | " |
| | 3. திரு. சு.ரவி,<br>அரக்கோணம் தொகுதி<br>சட்டமன்ற உறுப்பினர் | எண்.260/2, பழைய காலனி,<br>அரிகிலபாடி கிராமம் மற்றும் அஞ்சல்,<br>அரக்கோணம் வட்டம்,<br>ராணிப்பேட்டை - 631151<br><u>சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு முகவரி</u><br>"B" பிளாக், 6-வது மாடி,<br>Qts. எண். "F"<br>சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு, ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,சென்னை- 600 002. | " |
| (ஈ) | <u>மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்கள்</u> | | |
| | (i) மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வு பணியில் அனுபவம் மற்றும் நிபுணத்துவமிக்க நபர்கள் - ஐந்து உறுப்பினர்கள் | 1. திருமதி. எல்.வி.ஜெயஸ்ரீ,<br>இயக்குநர்,<br>தமிழ்நாடு ஸ்பாஸ்டிக்ஸ் சங்கம் (Spastics Society of Tamil Nadu),<br>சிஎஸ்ஐஆர் சாலை, தரமணி,<br>சென்னை-600113. | உறுப்பினர் |
| | | 2. டாக்டர் பி.ஆர்.லட்சுமி,<br>நிறுவனர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,<br>மூலக்கூறு நோயறிதல், | " |

| | | | |
|---|---|---|---|
| | | கலந்தாய்வு, விழிப்புணர்வு மற்றும் ஆராய்ச்சி நிலையம் (MDCRC), நிலை 7, ராயல் கேர் சூப்பர்ஸ்பெசாலிட்டி மருத்துவமனை, 1/520, எல் அன்ட் டி புறவழிச்சாலை, நீலம்பூர், கோயம்புத்தூர் - 641062 | |
| | | 3. டாக்டர் கே.வி. கிஷோர் குமார், இயக்குநர், பான்யன் & பாம் அறக்கட்டளை (The Banyan & Balm Trust), 6-வது பிரதான சாலை, முகப்பேர் ஏரித் திட்டம், முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037. | " |
| | | 4. திருமதி. லட்சுமி ஹரிகரன், மெட்ராஸ் டிஸ்லெக்ஸியா கழகம் (Madras Dyslexia Association), பார்க் வியூ, முதல்தளம், 94, G.N. செட்டி சாலை, (ஜீவா பூங்கா அருகில்), தி.நகர், சென்னை – 17. | " |
| | | 5. டாக்டர் சுரேகா ராமசந்திரன், தலைவர், இந்திய டவுன் சின்ட்ரோம் கூட்டமைப்பு (Down Syndrome Federation of India), புதிய எண்.15, பழைய எண்.27, சி.பி. ராமசாமி சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18. | " |
| | (ii) மாவட்டங்களிலிருந்து (சுழற்சி அடிப்படையில்)- ஐந்து உறுப்பினர்கள் | 1. டாக்டர் வி.நாகராணி, நிறுவனர் /அறங்காவலர், ஹோப் பப்ளிக் சாரிட்டபிள் டிரஸ்ட், எண்.47, புனித தோமையர் தெரு, காமராஜபுரம், பட்டாபிராம், திருவள்ளூர்- 600 072 | உறுப்பினர் |
| | | 2. திருமதி. எஸ்.சிவகாமி, எண்.36, சிதம்பரம் சாலை, சமுதாயக்கூடம், ஜெயங்கொண்டம், அரியலூர் - 621 802 | " |

| | | | |
|---|---|---|---|
| | | 3. திரு.ஏ.கே.செல்வம்,<br>தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்கம், மேல நெம்மக்கோட்டை, ஆலங்குடி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம். | " |
| | | 4. திரு. எஸ். சிவகுமார்,<br>3/3, திலகர் மைதானம்,<br>சின்னபுளியம்பட்டி,<br>அருப்புக்கோட்டை,<br>விருதுநகர் - 626 101. | " |
| | | 5. திரு. டி. ஜாகீர் உசேன்,<br>67/2, அண்ணா சாலை, சின்ன திருப்பதி, சேலம் - 636 008. | " |
| | (iii) அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சங்கங்களிலிருந்து-பதினொன்று உறுப்பினர்கள் | 1. திருமதி. ஸ்மிதா சாந்தகுமாரி சதாசிவன்,<br>Disability Rights Alliance Tamil Nadu,<br>சி.1 அன்பொளி அடுக்ககம்,<br>7/4, குருவப்பன் தெரு,கோட்டூர்,<br>சென்னை - 600 085 | உறுப்பினர் |
| | | 2. திருமதி. வி. யசோதா,<br>டிசம்பர் 3 இயக்கம்,<br>33, செக்கு மேட்டுத்தெரு,<br>கள்ளக்குறிச்சி - 606 202. | " |
| | | 3. செல்வி. ப்ரித்தி சீனிவாசன்,<br>சோல் பிரி குழு வந்தனா,<br>108/1, மணகுளவிநாயகர் கோயில் தெரு, செங்கம் சாலை,<br>யோகி ராம்சுரத்குமார் ஆசிரமம் எதிர்புறம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | " |
| | | 4. திருமதி ஜே.செல்வகுமாரி,<br>தமிழ்நாடு காதுகேளாத மகளிர் சங்கம்,<br>17, புதிய காமராஜர் நகர்,<br>4வது காலனி, ராயபுரம்,<br>சென்னை - 600 013. | " |
| | | 5. செல்வி. டி. கஸ்தூரி,<br>தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் | " |

| | | | |
|---|---|---|---|
| | | பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம், மேலத்தெரு, தென்னமநாடு தெற்கு, தென்னமநாடு, ஒரத்தநாடு வட்டம், தஞ்சாவூர் - 614 625. | |
| | | 6. திரு. எஸ்.முத்துகுமார், டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் சமூக நல மேம்பாட்டு அறக்கட்டளை, 4/36, குழந்தைபட்டி காளியம்மன் கோயில் தெரு, சீலப்பாடி அஞ்சல், முள்ளிப்பாடி கிராமம், திண்டுக்கல் - 624 005. | " |
| | | 7. திரு.டி.கே. விஜயகுமார், 1/148, தைய்யகுனி (H), கொன்னச்சல் அஞ்சல், எருமாடு, நீலகிரி- 643 239. | " |
| | | 8. திரு. கே.ரகுராமன், கர்ண வித்யா பவுண்டேசன், 1 ஏ, காளமேகம் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059. | " |
| | | 9. திரு. எஸ்.துரைராஜ், ஈரோடு மாவட்ட மாற்றுத் திறனுடையோர் நலச் சங்கம், 18-19, தனலெட்சுமி கார்டன், முகாசிபுலவன்பாளையம் (கிராமம்), வெள்ளோடு, பெருந்துறை, ஈரோடு மாவட்டம். | " |
| | | 10. திரு. எம். கோபால கிருஷ்ணன், Progressive Association of the Differently Abled, எண்.21, டாக்டர் அப்துல் கலாம் தெரு, விவேகானந்தா நகர், பெரமனூர், மறைமலை நகர், செங்கல்பட்டு - 603 209. | " |

| | | | |
|---|---|---|---|
| | | 11. திரு.நா.கருணாநிதி,<br>C2/18, பொதுப்பணித்துறை<br>குடியிருப்பு, தாடண்டர் நகர்,<br>சைதாப்பேட்டை,<br>சென்னை – 600 015. | " |
| | (iv) மாநில வர்த்தக மற்றும் தொழிற் சபை சார்பாக- மூன்று உறுப்பினர்கள் | 1. திரு. எஸ். அன்புராஜன்,<br>தமிழ்நாடு சிறு மற்றும் குறு நிறுவனங்கங்களின் கூட்டமைப்பு (TANSTIA) எண்.10, ஜி.எஸ்.டி. சாலை, கிண்டி, சென்னை - 600 032. | உறுப்பினர் |
| | | 2. திரு. ஆர்.ராதாகிருஷ்ணன்,<br>மண்டல துணைத் தலைவர்,<br>அகில இந்திய உற்பத்தியாளர் கூட்டமைப்பு (AIMO). ட்ரியடாஸ் (Triadas) எஸ்.1, இரண்டாவது தளம்,<br>எண்.21, சீனிவாச நகர்,<br>கந்தன்சாவடி, பழைய மாமல்லபுரம் சாலை ,சென்னை - 96. | " |
| | | 3. திரு. டி.வி. ஹரிகரன்,<br>துணைத் தலைவர்,<br>குறு வணிக நிறுவனங்களின் கூட்டமைப்பு, 10, ஜி.எஸ்.டி. சாலை, கிண்டி,சென்னை - 32. | " |
| (உ) | மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் | | அலுவல் சார் உறுப்பினர் செயலர் |

ஆர்.லால்வேனா
அரசு செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 25/05/2022

25/05/2022